


திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் கழகத் துணைப்பொதுச் செயலாளர் அமைச்சர் இ. பெரியசாமி,கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் சிறப்பாக செயல்பட்ட 60 வாக்குச்சாவடி முகவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.உடன் கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் உள்ளார்.




தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மானம் ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் இலஞ்சியில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக கொள்கை பரப்பு செயலாளர் – தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் வாரிய தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### இராணிப்பேட்டையில்

# தி.மு.க. தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!

இராணிப்பேட்டை, செப். 22-

இராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்து நிலையம் அருகே மாவட்ட திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு,தமிழ்நாட்டை தலை குனியவிடமாட்டேன் உறுதி ஏற்பு தீர்மான விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி தலைமை தாங்கினார்.நகர செயலாளர் பி.பூங்காவனம்

அனைவரையும் வரவேற்று பேசினார்.

மாவட்ட அவை தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.சிவானந்தம் ,கே. துரைமஸ்தான், குமுதா குமார்,தலைமை செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் சேஷா வெங்கட்ரமணன், கே.எம்.சண்முகம்,

ஏ.வி. நந்தகுமார், டி.சி. பத்மநாபன், நகர செயலாளர்கள் து.தில்லை,கே.எம். ஹிமாயூன், பேரூர்செயலாளர் சி.பெரியசாமி, வாலாஜா நகராட்சி தலைவர் டி.ஹரிணி தில்லை, அம்மூர் பேரூராட்சி மன்ற தலைவர் சங்கீதா மகேஷ் , ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி பேசியதாவது:

தமிழகத்தில் பொதுமக்கள் நலன் பெற தேவையான மகத்தான திட்டங்களை ஒவ்வொரு நாளும் சிந்தித்து நிறைவேற்றி வருபவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அரசின் பல திட்டங்கள் இந்திய அளவில் முன்னோடி திட்டமாக உள்ளது. தேர்தல் வாக்குறுதிகளில் சொன்னதை மட்டும் கருத்தில் கொள்ளாமல் பொது மக்களுக்கு என்னென்ன தேவை என்பதை சிந்தித்து நிறைவேற்றியவர் நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தான் என புகழாரம் சூட்டினார்.

நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளர் எ.வவேலு சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டை பெற உயிரிழந்த தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக நினைவு மண்டபத்தை அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதற்கான நிதியை ஒதுக்கி தந்து பொறுப்பை பொதுப் பணித்துறைக்கு வழங்கியதால் அதனை நான் நிறைவேற்ற வாய்ப்பு கிடைத்தது. முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதிலிருந்து தற்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி காலம் வரையில் தி.மு.க. எப்போதும் வன்னியர்களுக்கு உற்ற தோழனாக விளங்குவ தோடு எண்ணற்ற தேவைகளை நிறைவேற்றி தந்துள்ளது. வன்னியர்களின் கோரிக்கையான இட ஒதுக்கீட்டை வழங்கியதும் 10.5சதவீத உள்இட ஒதுக்கீட்டிற்கு முறையாக சட்டம் இயற்றி தந்ததும் தி.மு.க. தான். ஆனால் சாதிவாதி கணக்கெடுப்பு நடத்த திமுக தயங்குவதாக அன்புமணி ராமதாஸ் கூறுகிறார் .

மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரம் மத்திய அரசுக்கு தான் உள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பு சூழல் உருவாகும் பட்சத்தில் நிச்சயம் தி.மு.க. அதனைசெயல்படுத்தும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், மாநில சுற்றுச் சூழல் அணி துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, இராணிப்பேட்டை நகராட்சி தலைவர் கே.சுஜாதா வினோத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்

மு . கண்ணையன் அ.அசோகன் எம்.எஸ். கலைமணி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி திருமூர்த்தி, தொகுதி பார்வையாளர்கள் அரக்கோணம் சூர்யா வெற்றி கொண்டான், சோளிங்கர் இரா.பாஸ்கர் , இராணிப்பேட்டை ஆதிசேஷன், ஆற்காடு என். மருது கணேஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.விநோத், மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் இசட். அப்துல்லா,

நகர கழக செயலாளர்கள் வி.எல்.ஜோதி ஏ.வி. சரவணன் எம்.கோபி ,பொதுக்குழு உறுப்பினர் சி. மாணிக்கம், சிட்டிபாபு கிருஷ்ணன், சீனிவாசன், பி.கே.பொன்னன், மார்க்பந்து, மல்லிகா அமரேசன், ஒன்றிய குழு தலைவர்கள் நெமிலி பி.வடிவேலு, நிர்மலா சௌந்தர்,ஏ. கலைக்குமார் கே. அனிதா ,

எஸ் புவனேஸ்வரி எம். திவ்யா நகரமன்ற தலைவர்கள் லட்சுமி பாரி, தமிழ் செல்வி அசோகன், தேவி பென்ஸ் பாண்டியன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் எஸ்.எம். நாகராஜ் அம்பிகாபாபு ,

மங்கையர்கரசி, சுப்பிரமணி, சக்தி மாலதி கணேசன், பி .செல்வம் காந்திமதி பாண்டுரங்கன், சுந்தரம் பாள் பெருமாள், சி.தன்ராஜ், ஆர்.சிவக்குமார் தேவி சிவா, சயனபுரம்ஊராட்சி மன்றதலைவர் பவானி வடிவேலு நகர இளைஞரணி அமைப்பாளர் இசட்.ஏ.அஜ்மல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளரும் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினருமான ஜே.எல் ஈஸ்வரப்பன் நன்றி உரை ஆற்றினார்.

### கலைஞர் காவியம் உள்ளிட்ட நூல்கள் மறு வெளியீடு!

# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உருவப்படம் திறப்பு!

### உலகத் தமிழ் அறக்கட்டளை – வாசிங்டன் தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்துகிறது!

வாசிங்டன், செப். 22-

பன்னாட்டுத் தமிழுறவு மன்ற நிறுவனர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்களின் 75 ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தமிழ் இலக்கியம், (பத்திரிகை) இதழ், சமூகப் பணி ஆகிய துறைகளில் அரிய சேவையாற்றியதையொட்டி உலகத் தமிழ் அறக்கட்டளை (மேரிலாண்டு, அமெரிக்கா) மற்றும் வாசிங்டன் தமிழ் அமைப்புகள் இணைந்து பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உருவப் படத் திறப்பு மற்றும் நோபல் தவம், கலைஞர் காவியம், சேது காப்பியம் ஆகிய நூல்கள் மறு வெளியீடு நிகழ்ச்சி ஹோவர்டு கவுண்டி நூலக அமைப்பு - மத்திய கிளை - மேக்சின் வைட் வார் ஃபீல்ட் அரங்கத்தில் 2.10.2025 மாலை 5.45 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறுகிறது.

அனைத்து தமிழ் அமைப்புகளும் இதில் பங்கேற்று சிறப்பிக்குமாறு உலகத் தமிழ் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் தமிழ் மணிகண்டன் சேதுராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலையில்

# கரூரில் 'ஓரணியில் தமிழ்நாடு' - மாபெரும் பொதுக்கூட்டம்!

## திருச்சி என்.சிவா எம்.பி. சிறப்புரையாற்றினார்!

கரூர், செப்.22-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட திமுக சார்பில் 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' மற்றும் 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு பிரம்மாண்ட பொதுக்கூட்டம் கரூர் 80அடி சாலையில் நடைபெற்றது. கரூர் மாவட்ட அவை தலைவர் டி. ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாநகர செயலாளர் எஸ்பி. கனகராஜ் வரவேற்புரை ஆற்றினார்.

கழக துணைப் பொதுச் செயலாளர், உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர், மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி என்.சிவா எம்பி, கரூர் மாவட்ட கழக செயலாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றினர். இவர்கள் முன்னிலையில் கூட்டத்தில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான கழகத்தினர் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

எம்.எல்.ஏ.க்கள் பிஆர். இளங்கோ, க.சிவகமசுந்தரி, இரா. மாணிக்கம், பரணி கே.மணி, முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, பி.விஜயகுமார், மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், கரூர் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் எம்எஸ்கே கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என்.செல்வராஜ், பகுதி கழக செயலாளர்கள் க. சுப்பிரமணியன், கோல்ட் ஸ்பாட் ஆர்எஸ்.ராஜா, ஆர்.ஜோதிபாசு, விஜிஎஸ். குமார், எம்.பாண்டியன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் இ.ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம். ரகுநாதன், ஜி.அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவி ராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என் மணிகண்டன், த. கார்த்திக், சி.வளர்மதி, பி முத்துக்குமாரசாமி, வி.கே. வேலுச்சாமி, எல்.கரிகாலன், ப. தியாகராஜன், சி.கதிரவன், புகழூர் நகர செயலாளர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் வாசிம் ராஜா,

பொதுக்குழு உறுப்பினர்கள் என்எஸ்.ஆறுமுகம், வி .கருப்பண்ணன், விகேடி. ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே சாமிநாதன், சி.கருப்பையா, பிபி சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ் காளியப்பன், எம்.சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏ.குமார், பேரூர் செயலாளர்கள் கே.அம்மையப்பன், கே. முரளிராஜா, இ.ரவீந்திரன், ஆர்.மோகன்ராஜ், எம். சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ், பிஎஸ்.மணி,

அணி அமைப்பாளர்கள் வெங்கமேடு சக்திவேல், ஆர்ஜி சரவணமூர்த்தி, ஜிம் சிவா, நந்தினி தேவி, தாசப் பிரகாஷ், ஏ. சுப்பிர மணியன், தென்னிலை பாலு, பி.சங்கர், அருணா பொன்னுசாமி, வி.அருண், பி. மோகனசுப்பு, பழ.அப்பாசாமி, தியாகராஜன், எம். பிரின்சி, சி.நவாஸ் கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லசாமி, எஸ். மனோகர், எம்ஆர்எஸ் சுரேஷ், பங்க் சுப்பிரமணி, விஆர் அண்ணா வேலு, வழக்கறிஞர் என். செந்தில் குமார், டிஎம்.பஷீர்அகமது, முன்னாள் எம்எல்ஏக்கள் பி.காமராஜ், எஸ். காமராஜ், மற்றும் இரா.பிரபு, ஆர். ராமசாமி, ஆர்.கந்தசாமி, கா. அன்பரசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கனகராஜ், ராஜா, பாபு, அருண், யுவராஜ், வழக்கறிஞர்கள் இரா. குடியரசு, பி.லட்சுமணன், பிச்சை முத்து, டி. ராஜேஸ்வரி, டி.நீலமேகம், சாகுல் ஹமீது, ரமேஷ், பாலசுப்பிரமணியன்,

மாநகர கழக நிர்வாகிகள் கேவி.தங்கவேல், கேஎஸ்.அறிவின்ஸ், எம் நிஷா, அங்கு நா.பசுபதி, ஆர்.வெங்கடேஷ், கேஎம். பாலகிருஷ்ணன், பி.சண்முகம், கேஆர்.சுந்தர்ராஜன் ஏ.ஆரோக்கிய ஜெயபால், பி.பழனிவேல், ஜி.ஜீவரத்தினம், பி. சுப்பிரமணி, அக. இளமுருகு மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் ஆர். ஜோதிபாசு நன்றி கூறினார். கரூர் மாவட்ட திமுக சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில் - இன்று

# தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம், ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் – ஏ.கே.எஸ்.விஜயன் சிறப்புரை! வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர்,செப்,22

தமிழ்நாட்டின் மண் மொழிமானம் காக்க கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்" என்ற தீர்மான ஏற்புக் கூட்டங்கள், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி தமிழகம் முழுவதும் நடைபெறுகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை



அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, இன்று (22.09.2025, திங்கட் கிழமை),மாலை 6.00 மணியளவில், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அம்பேத்கர் சிலை அருகில், பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெறும் தீர்மான ஏற்பு கூட்டத்திற்கு , பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர் எம்.இராஜ் குமார் வரவேற்புரையாற்றுகிறார்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன்(நான்) தலைமை வகிக்கிறேன். இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாநில விவசாய அணி செயலாளர் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன்.Ex.MP.

தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை தமிழினியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர். கே.என். அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் ம.மணிவாசகம் நன்றியுரையாற்றுகிறார்.

இந்த தீர்மான ஏற்புக் கூட்டத்தில், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,

ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள்,கழக முன்னோடிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் .



விருதுநகர் மாவட்டம் , திருச்சுழி ஊராட்சி ஒன்றியம் , முத்துராமலிங்கபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின் " திட்டத்தின் கீழ் , நடைபெற்ற பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை துவக்கி வைத்து , கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும் , அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலவாரிய அட்டைகளையும் , மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில் , நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார் .




வேலூர் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள மண்டித்தெருவை நகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்து குப்பைகளை அகற்ற உத்தரவிட்டனர்.